கல்வி அமைச்சு

(உயர்கல்விப் பிரிவு)

# இலங்கை மாணவர்களுக்காக வெளிநாடுகள் / நிறுவகங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் தொடர்பான வழிகாட்டிக் கோவை

## 2024


- **கல்வி அமைச்சு உயர்கல்விப் பிரிவு, இலக்கம் 18, வோட் பிளேஸ், கொழும்பு 07**

## அறிமுகம்

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை பூகோள ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாசார ரீதியிலான பல்வேறு தொடர்புகளை விருத்தி செய்துகொள்வதற்கு முனைந்தமையின் காரணமாக பல்வேறு வெளிநாட்டு அரசுகளுடன் தொடர்புகளைப் பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதன் பெறுபேறாக கல்வி மற்றும் கலாசாரம் சார்ந்த சந்தர்ப்பங்களை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. நட்பு நாடுகள் மற்றும் ஏனைய வெளிநாட்டு அரசுகளினால் அந்த நாடுகளின் கல்வி மற்றும் கலாசாரம் சார்ந்த பெறுமதிகளை உலகளாவிய ரீதியில் பரிமாறிக்கொள்வதன் பெறுபேறாக இந்த நாட்டு மாணவர்களுக்கு வெளிநாடுகளக்குச் சென்று அந்த நாடுகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இதுவரை பல்வேறு வெளிநாடுகளினால் இந்த நாட்டு மாணவர்களுக்கு இளமாணிப் பட்டம் மற்றும் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளைப் பயிலுவதற்காக புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த வாய்ப்புக்கள் மூலம் அந்த மாணவர்கள் உச்சளவு பயனைப் பெற்றுக்கொள்வதுடன் தற்போது மாணவர்கள் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்கள் தொடர்பாக பாரியளவு ஆர்வம் காட்டுவதுடன் வருடாந்தம் கல்வி அமைச்சின் ஊடாக இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளுக்கு அதிக எண்ணிக்கையான புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் நோக்கில் மற்றும் அறிவார்ந்த மனித வளமொன்றை உருவாக்கும் நோக்கில் வெளிநாடுகள் மற்றும் நிறுவனங்களினால் இந்த நாட்டு மாணவர்களுக்கு இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டப் பாடநெறிகளைப் பயிலுவதற்காக வழங்கப்படும் புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவின் முக்கிய கடமையாகும். எனவே இந்தப் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு விண்ணப்பித்தல், மாணவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் பெயர்களை முன்மொழிதலுடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய அறிவு மற்றும் வழிகாட்டலைப் பெற்றுக்கொடுப்பதனை இந்த வழிகாட்டிக் கோவையை வெளியிடுவதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்கு ஆரம்பமாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் மீது கவனத்தைச் செலுத்துவதற்கு எதிர்பார்ப்பதுடன், புலமைப்பரிசில்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அமைச்சின் இணையத்தளத்தினூடாகப் (www.mohe.gov.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

1. வெளிநாடுகள் / நிறுவனங்களினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் முறைகள்
2. நேரடியாக விண்ணப்பங்கோரலின் கீழ் புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகள் மற்றும் காலப் பகுதிகள்
3. புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் விதம்
4. புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படை நிபந்தனைகள்
5. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் செயல்முறை
6. விண்ணப்பங்களை முன்னுரிமை வரிசைப்படுத்தல் செயல்முறை
7. நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யும் செயல்முறை

8. புலமைப்பரிசிலுக்கு பெயர்களை பிரேரித்தல் மற்றும் விண்ணப்பங்களை குறித்த நாடுகளுக்கு அனுப்பும் செயல்முறை
9. புலமைப்பரிசிலுக்காக குறித்த நாடுகளினால் மாணவர்களை தெரிவு செய்யும் செயல்முறை
10. வீசா மற்றும் ஏனைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்
11. புலமைப்பரிசில் நிறைவடைந்ததன் பின்னர் மாணவர்கள் நாட்டுக்குத் திரும்பியதன் பின்னரான செயல்முறை
12. புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான விதம்

## 01. வெளி நாடுகள் / நிறுவனங்களினால் புலமைப்பரிசில்களை வழங்கப்படும் முறைகள்

வெளிநாடுகளினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் வாய்ப்புக்களை அடிப்படையில் கீழுள்ளவாறு குறிப்பிடலாம்.

- நாடுகளுக்கிடையில் ஏற்படுத்திக்கொள்ளப்படும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் (MOU) ஊடாக மற்றும் அமைச்சுக்கு வெளிநாடுகளினால் விண்ணப்பங்கோரல் ஊடாக வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்
- வெளிநாடுகள் / நிறுவனங்களினால் வழங்கப்படும் நேரடிப் புலமைப்பரிசில்கள் (Direct Scholarships)

**வெளிநாடுகளினால் விண்ணப்பங்கோரல் ஊடாக வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்கள்**

வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் உயர் ஸ்தானிகர் அலுவலகங்களூடாகவும் இந்த நாட்டில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரகங்கள் / உயர் ஸ்தானிகர் அலுவலகங்களூடாக இந்தப் புலமைப்பரிசில் திட்டங்கள் சம்பந்தமான தகவல்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக இந்த அமைச்சுக்கு அனுப்பப்படும். இங்கு கல்வி அமைச்சினால் இந்தத் திட்டத்திற்குப் பொருத்தமான மாணவர்களைத் தெரிவுசெய்து பிரேரிக்கும் (முன்மொழியும்) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**வெளிநாடுகள் / நிறுவனங்களினால் வழங்கப்படும் நேரடிப் புலமைப்பரிசில்கள் (Direct Scholarships)**

நாடுகள் மற்றும் நிறுவனங்களூடாக நேரடியாக புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. அந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான விபரங்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் மாணவர்களுக்கு அந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்.

## 02. நேரடியாக விண்ணப்பங்கோரலின் கீழ் புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகள் மற்றும் காலப் பகுதிகள்

❖ **இளமாணிப் பட்டப் புலமைப்பரிசில் திட்டங்கள்**

| இல. | நாடு | அறிவித்தல் வெளியிடப்படும் காலப் பகுதி | புலமைப்பரிசில் வழங்கப்படும் காலப் பகுதி |
|---|---|---|---|
| 1 | இந்தியா | ஜனவரி - பெப்ருவரி | யூன் - ஒக்தோபர் |
| 2 | ஹங்கேரியா | நவம்பர் | யூன் - ஆகஸ்ட் |
| 3 | ஜப்பான் | ஏப்ரல் | மார்ச் |
| 4 | கியூபா | ஆகஸ்ட் | நவம்பர் |
| 5 | சர்பியா | செப்தெம்பர் | திசெம்பர் - ஜனவரி |
| 6 | இந்தியா (ஆயுஷ் புலமைப்பரிசில்) | யூன் | நவம்பர் |
| 7 | சீனா | நவம்பர் | யூலை |

❖ **பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசில் திட்டங்கள்**

| இல. | நாடு | அறிவித்தல் வெளியிடப்படும் காலப் பகுதி | புலமைப்பரிசில் வழங்கப்படும் காலப் பகுதி |
|---|---|---|---|
| 1 | இந்தியா | ஜனவரி - பெப்ருவரி | யூன் - ஒக்தோபர் |
| 2 | சீனா | நவம்பர் | யூலை |
| 3 | ஜப்பான் | ஏப்ரல் | மார்ச் |
| 4 | ஹங்கேரியா | நவம்பர் | யூன் - ஆகஸ்ட் |
| 5 | ஐக்கிய இராச்சியம் | ஆகஸ்ட் | திசெம்பர் |
| 6 | இந்தியா (ஆயுஷ் புலமைப்பரிசில்) | யூன் | நவம்பர் |

**குறிப்பு - புலமைப்பரிசில்களை வழங்கும் நாடு / நிறுவனத்திற்கமைய மற்றும் கல்வி அமைச்சினால் குறித்த புலமைப்பரிசில்களை வழங்குதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட காலப் பகுதிகள் மாற்றமடையலாம்.**

## 03. புலமைப்பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் விதம்

புலமைப்பரிசில் வழங்கப்படும் நாடுகளிலிருந்து புலமைப்பரிசில் பற்றிய அறிவித்தல் கிடைத்தல்

↓

இணையத்தளம் மற்றும் பத்திரிகைகளில் அறிவித்தலை வெளியிடல்

↓

இணையவழி ஊடாக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்

↓

கவனத்திற்கொள்ளப்படும் அளவுகோல்களின் கீழ் மாணவர்களின் விண்ணப்பங்களை முன்னுரிமை வரிசைப்படுத்தல்

↓

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்களை அனுப்புதல்

↓

நேர்முகத் தேர்வுகளை நடாத்துதல்

↓

நேர்முகத் தேர்வுகளின் பெறுபேறுகளுக்கமைய பொருத்தமான விண்ணப்பதாரிகளை தெரிவுசெய்தல்

↓

பிரேரிக்கப்பட்ட பெயர்களை குறித்த நாடுகளுக்கு அனுப்புதல்

↓

குறித்த நாடுகளினால் தெரிவுகள் தொடர்பான கடிதங்களை அமைச்சுக்கு அனுப்புதல்

↓

தெரிவு பற்றிய கடிதங்களை விண்ணப்பதாரிகளுக்கு அனுப்புதல்

## 04. புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படை நிபந்தனைகள்

❖ **இளமாணிப் பட்டப் புலமைப்பரிசில் திட்டங்கள்**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- உரிய வயதெல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகளினால் குறித்த வயதெல்லை தீர்மானிக்கப்படும்.)
- குறைந்தது மூன்று **S** சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.(புலமைப்பரிசில் திட்டத்திற்கமைய மாற்றமடைய முடியும்.)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிலவும் அரச பல்கலைக்கழகமொன்றில் பட்டப் பாடநெறியொன்றைப் பயிலுவதற்காக உள்ளக மாணவராகப் பதிவு செய்யாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கில மொழித் தேர்ச்சி (இது புலமைப்பரிசிலுக்குரிய ஊடக மொழிக்கமையத் தீர்மானிக்கப்படும்.)
- சிறந்த உடலாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

❖ **பட்டப்பின் (முதுகலைமாணி / முதுவிஞ்ஞானமாணி) புலமைப்பரிசில் திட்டங்கள்**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- உரிய வயதெல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகளினால் குறித்த வயதெல்லை தீர்மானிக்கப்படும்.)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிடமிருந்து ஏற்புடைய கற்கைத்துறையில் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (புலமைப்பரிசிலை வழங்கும் நாட்டிற்கமைய பட்டத்தின் வகுப்புச் சித்தி கவனத்திற்கொள்ளப்படும்.)
- ஆங்கில மொழித் தேர்ச்சி (இது புலமைப்பரிசிலுக்குரிய ஊடக மொழிக்கமையத் தீர்மானிக்கப்படும்.)
- சிறந்த உடலாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

❖ **பட்டப்பின் (கலாநிதி) புலமைப்பரிசில் திட்டங்கள்**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- உரிய வயதெல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். (புலமைப்பரிசில்களை வழங்கும் நாடுகளினால் குறித்த வயதெல்லை தீர்மானிக்கப்படும்.)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிடமிருந்து ஏற்புடைய கற்கைத்துறையில் பட்டத்தை மற்றும் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (புலமைப்பரிசிலை வழங்கும் நாட்டிற்கமைய பட்டத்தின் வகுப்புச் சித்தி கவனத்திற்கொள்ளப்படும்.)
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிடமிருந்து ஏற்புடைய கற்கைத்துறையில் முதுகலைமாணி /

முதுவிஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (புலமைப்பரிசிலை வழங்கும் நாட்டிற்கமைய பட்டத்தின் வகுப்புச் சித்தி கவனத்திற்கொள்ளப்படும்.)

- ஆங்கில மொழித் தேர்ச்சி (இது புலமைப்பரிசிலுக்குரிய ஊடக மொழிக்கமையத் தீர்மானிக்கப்படும்.)
- சிறந்த உடலாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

❖ **குறிப்பு - புலமைப்பரிசில்களை வழங்கும் நாடு / நிறுவனத்திற்கமைய மற்றும் கல்வி அமைச்சினால் குறித்த புலமைப்பரிசில்களை வழங்குதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய மேற்குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மாற்றமடையலாம்.**

## 05. விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் செயல்முறை

- வெளிநாடுகளினால் புலமைப்பரிசில் திட்டங்கள் சம்பந்தமாக அமைச்சுக்கு அறிவித்ததன் பின்னர் அமைச்சின் இணையத்தளத்தில் (www.mohe.gov.lk), மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படும் தேசிய செய்திப் பத்திரிகைகளில் மற்றும் அமைச்சின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் அறிவித்தல் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்காக அமைச்சினால் இணையவழி மூலம் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த இணையத்தள அறிவித்தல்கள் பிரசுரிக்கப்படும் சந்தர்ப்பங்களின்போது குறித்த இணையவழி விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இடையிணைப்பியும் (Link) குறிப்பிடப்படுவதுடன், அதனூடாக மாணவர்களுக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முடியும்.

### இணையவழி (online) விண்ணப்பங்களை அனுப்பும் செயல்முறை

- கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவினூடாக புலமைப்பரிசில்கள் சம்பந்தமான அறிவித்தல்கள் பிரசுரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இணையவழி இடையிணைப்பியைக் (https://foreignscholarships.mohe.gov.lk) குறிப்பிடுவதுடன் அதனூடாக கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

இணையத்தள அறிவித்தலில் உள்ள இணையவழி இடையிணைப்பி (Link) ஊடாக இணைய நுழைவாயில் (Web Portal) பிரவேசித்து பதிவு செய்தல்


↓

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பத்தை நிரப்புதல்

↓


இணையவழி விண்ணப்பத்தை அமைச்சுக்கு அனுப்புதல்
**(செயல்முறையின் இறுதியில் கிடைக்கும் PDF கோவையை தபாலில் அனுப்பத் தேவையில்லை)**

**<u>முதலாவது படிமுறை</u>**





பதிவு செய்வதற்காக Register மீது click செய்யவும்.

**<u>இரண்டாவது படிமுறை</u>**





தேவையான தரவுகளைப் பூரணப்படுத்தியதன் பின்னர் Register மீது click செய்யவும். இங்கு உங்களால் பெற்றுக்கொடுக்கப்படும் கடவுச்சொல் (Password) மீண்டும் தேவைப்படுவதனால் அதனை ஞாபகத்தில் இருத்திக்கொள்ள முடியுமான வகையில் பொருத்தமான முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளல் முக்கியமாகும்.

**<u>மூன்றாவது படிமுறை</u>**




Sign in பொத்தான் (Button)மீது click செய்யவும்.

**<u>நான்காவது படிமுறை</u>**




Scholarship type ஊடாக நீங்கள் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் புலமைப்பரிசில் திட்டத்தை தெரிவுசெய்து continue மீது click செய்து குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளவும்.

விண்ணப்பத்தை அனுப்பியதன் பின்னர் PDF பிரதியை பதிவிறக்கம் செய்துகொள்ளவும்.

விண்ணப்பத்தை தபாலில் அனுப்பு வேண்டிய அவசியமில்லையென்பதோடு விண்ணப்பத்தை அனுப்புவதற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கல்வி அமைச்சுக்கு (உயர்கல்விப் பிரிவுக்கு) நேரடியாக இணையவழி ஊடாக (online) விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். வேறு வழிகளில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் எவ்விதத்திலும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

## 06. விண்ணப்பங்களை முன்னுரிமை வரிசைப்படுத்தல் செயல்முறை

புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றதன் பின்னர், அடிப்படைத் தகைமைகள் மற்றும் புலமைப்பரிசில் தொடர்பான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் சுருக்கப் பட்டியலிடப்படுவார்கள். வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மற்றும் குறித்த நாட்டினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய புலமைப்பரிசில்களுக்காக அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுவதுடன், அதற்கமைய நேர்முகத் தேர்வுக்கு அழைப்பதற்காக விண்ணப்பங்கள் முன்னுரிமை வரிசைப்படுத்தப்படும்.

இளமாணிப் பட்ட புலமைப்பரிசில் திட்டத்திற்கு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் காண்பிக்கும் திறமையின் அடிப்படையில் [இஸெட் புள்ளி (Z. Score)] அடிப்படையில் மற்றும் புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்வதற்கான நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பதாரிகள் முன்னுரிமை வரிசைப்படுத்தப்படுவார்கள். அதற்கிணங்க குறித்த விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

பட்டப்பின் படிப்புக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இளமாணி (ஆரம்ப) பட்டத்தின் திறமை மற்றும் புலமைப்பரிசிலுக்குத் தெரிவு செய்யப்படுவதற்கான நிபந்தனைகளுக்கமைய விண்ணப்பதாரிகள் முன்னுரிமை வரிசைப்படுத்தப்படுவார்கள். அதற்கிணங்க குறித்த விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

## 07. நேர்முகத் தேர்வுக்கு தெரிவுசெய்யும் செயல்முறை

புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் செயல்முறையின்போது கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வொன்றினூடாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகத் தேர்வை நடாத்தும் செயல்முறை கீழ் குறிப்பிடப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படும்.

**1** நேர்முகத் தேர்வு சபைகளை நியமித்தல்

**2** புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் செயல்முறைக்கு கல்வி அமைச்சினால் விடயத்துறைகளில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களைப் போன்றே கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்களைக் கொண்ட நேர்முகத் தேர்வு சபையொன்று நியமிக்கப்படும்.

**3** **இளமாணிப் பட்டத்திற்காக,**

- அமைச்சின் பணிப்பாளரின் பிரதிநிதித்துவம்
- பல்கலைக்கழக விரிவுரையாளர் பிரதிநிதித்துவம் (விடயத்துறை சார்ந்த)
- பல்.மானி.ஆ.குழுவின் பிரதிநிதித்துவம்
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிநித்துவம்

**பட்டப்பின் படிப்புக்காக**

- அமைச்சின் மேலதிக செயலாளரின் பிரதிநிதித்துவம்
- பல்.மானி.ஆ.குழுவின் பிரதிநிதித்துவம்
- பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் 02 பிரதிநிதித்துவம் (விடயத்துறை சார்ந்த)
- ஏனைய அமைச்சொன்றின் பிரதிநிதித்துவம்
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிநித்துவம்

**A** நேர்முகத் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அழைப்புக் கடிதங்களை அனுப்புதல்

**B** புலமைப்பரிசில் திட்டங்களுக்கான நேர்முகத் தேர்வுக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளுக்கு அமைச்சினால் அழைப்புக் கடிதங்களை Email ஊடாக அனுப்பப்படும்.

**C** **நேர்முகத் தேர்வுக்காக கொண்டுவர வேண்டிய அடிப்படை ஆவணங்கள் -**

**இளமாணி / பட்டப்பின் படிப்புக்குத் தேவையான அடிப்படை ஆவணங்கள்**

- பிறப்புச் சான்றிதழ்
- தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
- ஏனைய சான்றிதழ்களின் பிரதிகள் (விளையாட்டு மற்றும் தலைமைத்துவம் / நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி பெற்றுக்கொண்ட வெற்றிகள் )
- ஆங்கில மொழித் தேர்ச்சி சான்றிதழ்கள்

**கல்விச் சான்றிதழ்கள்**

- இளமாணிப் பட்டத்திற்காக விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் இஸெட் புள்ளியுடனான பெறுபேறு மற்றும் சாதாரண தர பெறுபேறுகளின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
- பட்டப்பின் படிப்புக்கான விண்ணப்பதாரிகள் குறித்த பட்டச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள்.
- Publications/Books/extract ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

## 08. நேர்முகத் தேர்வுகளின் பின்னர் புலமைப்பரிசிலுக்காக பெயர்களைப் பிரேரிப்பதற்காக விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்தல்

நேர்முகத் தேர்வின்போது விண்ணப்பதாரிகள் காண்பிக்கும் திறமையின் அடிப்படையில் புலமைப்பரிசிலுக்கான தெரிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த நாடுகளினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கைக்கமைய நாடுகளுக்கு பெயர்கள் பிரேரிக்கப்படும். குறித்த நாடுகளினால் மேலதிக எண்ணிக்கை பெயர்களை பிரேரிக்குமாறு கோரப்படும் சந்தர்ப்பங்களின்போது அந்தப் பெயர்களும் பிரதான பெயர்ப்பட்டியலுடன் சமர்ப்பிக்கப்படும். பெயர்கள் பிரேரிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகள் குறித்த நாடுகள் மற்றும் பல்கலைக்கழகங்களினால் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தமது விண்ணப்பங்கள், குறித்த சான்றிதழ்கள் மற்றும் ஏனைய எழுத்தாவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 09. புலமைப்பரிசில்களுக்காக குறித்த நாடுகளினால் மாணவர்களைத் தெரிவு செய்யும் செயல்முறை

குறித்த பெயர்கள் பிரேரிக்கப்பட்டதன் பின்னர் அந்த நாடுகளின் புலமைப்பரிசில்கள் தொடர்பான நிபந்தனைகள் மற்றும் தெரிவு செய்யப்படும் முறைக்கமைய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பற்றிய தகவல்களை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக அல்லது குறித்த நாடு /நிறுவனம் / தூதரகங்கள் ஊடாக நேரடியாக இந்த அமைச்சுக்கு அறிவிக்கப்படும்.

கல்வி அமைச்சு ஊடாக புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் செயல்முறையின்போது குறித்த தகைமைகளைப் பரீட்சித்து உயர் தகைமைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டாலும் சில சந்தர்ப்பங்களில் குறித்த நாடுகள் அல்லது நிறுவனங்களினால் சில புலமைப்பரிசில்களை நிராகரிக்கும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

- விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது விண்ணப்பதாரிகளால் மேற்கொள்ளப்படும் குறைபாடுகள்
- புலமைப்பரிசில்களை வழங்கும் குறித்த நாடுகளினால் சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகளுடன் ஒத்திசைந்திராத சந்தர்ப்பங்கள்

எனவே புலமைப்பரிசிலுக்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்களை அனுப்பும்போது விண்ணப்பங்களை உரிய பிரகாரம் பூரணப்படுத்துதல் விண்ணப்பதாரிகளின் பொறுப்பென்பதோடு உரிய கல்வித் தகைமைகளுக்குப் பொருத்தமான பாடநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை தெரிவு செய்யும்போது விண்ணப்பதாரிகள் மிகவும் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

இந்த அமைச்சுக்கு புலமைப்பரிசில் வழங்குதல் சம்பந்தமான தகவல்கள் கிடைக்கப்பெற்றதன் பின்னர் குறித்த புலமைப்பரிசிலுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படுவதுடன், அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும் அனைவரும் அமைச்சினால் செயற்படுத்தப்படும் தகவல்கள் முறைமையொன்றினூடாக பதிவுசெய்துகொள்ளல் கட்டாயமென்பதோடு புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்பவர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய பத்திரத்தை பூரணப்படுத்தி இந்த அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

## 10. வீசா மற்றும் ஏனைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

புலமைப்பரிசில் பெறுபவர்களின் வீசா பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை குறித்த நாடுகளினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய விண்ணப்பதாரிகள் மேற்கொள்ள வேண்டுமென்பதோடு தூதரகங்கள் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தலையிட வேண்டிய சந்தர்ப்பங்களில் இந்த அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 11. புலமைப்பரிசில் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டுக்குத் திரும்பியதன் பின்னரான செயல்முறை

புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்பவர்கள் தமது பட்டப் பாடநெறியை நிறைவு செய்ததன் பின்னர் இந்த நாட்டுக்கு திரும்பியதன் பின்னர் அமைச்சுக்கு வருகைதந்து பட்டம் பற்றிய தகவல்கள் அடங்கிய தரவுகள் படிவத்தை பூரணப்படுத்த வேண்டுமென்பதோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டச் சான்றிதழை வழங்கும் பல்கலைக்கழகத்தின் செல்லுபடியாகும் தன்மை தொடர்பான சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தொடர்புடைய தகவல்களை www.ugc.lk இணையத்தளத்தில் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

## 12. புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான விதம்

புலமைப்பரிசில்கள் தொடர்பான அலுவல்கள் கல்வி அமைச்சின் உயர்கல்விப் பிரிவில் தாபிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுக் கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் கீழ் குறிப்பிடப்படும் வழிகளினூடாக எம்முடன் தொடர்புகொள்ள முடியும்.

அத்தோடு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **Web portal for Pre-Registration** இல் காணப்படும் **google form** இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைப் பூரணப்படுத்தி அனுப்புவதனூடாக அமைச்சினால் பிரசுரிக்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்கள் சம்பந்தமான தகவல்களை மின்னஞ்சல் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**Web portal for pre-registration**

Google form:

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSd1vrvaOyFW5P1jtJ9G9Ors4NzorDpNh5oSW2-eftZB6Y-mwQ/viewform?usp=sf_link

**முகவரி** - கல்வி அமைச்சு (உயர்கல்விப் பிரிவு)
வெளிநாட்டுக் கல்விப் பிரிவு
இலக்கம்: 18, வோட் பிளேஸ், கொழும்பு 07.

இணையத்தளம் - www.mohe.gov.lk

மின்னஞ்சல் - ovse@mohe.gov.lk

தொ.பே.இல. - 0112698994 (வெளிநாட்டுக் கல்விப் பிரிவு)

**எப்போதும் வினவப்படும் கேள்விகள்**

I. **கேள்வி - புலமைப்பரிசில் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதெப்படி?**

**பதில் -** அமைச்சின் இணையத்தளத்தில் (www.mohe.gov.lk) அனைத்துப் புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் இணையவழி விண்ணப்பப்படிவம் பிரசுரிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட காலப் பகுதிகளில் இணையவழி ஊடாக மாத்திரம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

II. **கேள்வி - புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களை இணையழி ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டுமா?**

**பதில் -** ஆம். தபால் ஊடாக அனுப்ப வேண்டியதில்லையென்பதோடு, அவ்வாறு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

III. **கேள்வி - புலமைப்பரிசல்களைப் பெற்று அவற்றை நிராகரித்த ஒருவருக்கு மீண்டும் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியுமா?**

**பதில் -** புலமைப்பரிசில் வாய்ப்புக்களை வழங்கியதன் பின்னர் அந்த வாய்ப்பை நிராகரித்தால் அந்த வாய்ப்பை வேறொருவருக்கு வழங்க முடியாதென்பதோடு அது நாட்டிற்கு கிடைக்கப்பெறும் அளிப்பொன்றாகுமென்பதனால் விண்ணப்பதாரிகள் இது சம்பந்தமாக கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு நிராகரித்தால் அவர்கள் தொடர்பில் மீண்டும் கவனத்திற்கொள்ளப்படும் ஆண்டில் புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

IV. **கேள்வி - புலமைப்பரிசில்கள் வழங்கப்படும் காலப் பகுதிகள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதெப்படி?**

**பதில் -** புலமைப்பரிசில் வாய்ப்புக்கள் பற்றிய அறிவித்தல்கள் வருடம் பூராவும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், காலப் பகுதிகள் தொடர்பான தகவல்களுக்கு அமைச்சின் இணையத்தளத்தில் பிரவேசிக்கவும்.


V. **கேள்வி - இளமாணிப் பட்டப் படிப்புக்கான புலமைப்பரிசிலைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் இந்த நாட்டில் பட்டப் பாடநெறியொன்றைப் பயிலுவதற்கான வாய்ப்புக்கள் இழக்கப்படுமா?**

**பதில் -** புலமைப்பரிசில் வாய்ப்புக்களுக்காக விண்ணப்பிக்கும்போது இந்த நாட்டு அரச பல்கலைக்கழகமொன்றில் உள்ளக மாணவராகப் பதிவு செய்துகொண்டிருப்பின்

விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அத்தோடு நேர்முகத் தேர்வுக்கு அழைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி பதிவு சம்பந்தமாக உறுதிப்படுத்திக்கொள்ளப்படும். அத்தோடு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதன் பின்னர் அந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுவதுடன், அந்த மாணவர்களுக்கு இந்த நாட்டுப் பல்கலைக்கழகமொன்றில் பதிவு செய்துகொள்வதற்கு முடியாது.

**VI. கேள்வி - புலமைப்பரிசிலுக்காக வழங்கப்படும் பட்டத்திற்கான அங்கீகாரம் பற்றி அறிந்துகொள்வதெப்படி?**

**பதில்** - புலமைப்பரிசில் வாய்ப்புக்களை வழங்கும் குறித்த பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கமைய கீழ் குறிப்பிடப்படும் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டிருப்பின் அந்தப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றாகக் கருதப்படும். அது பற்றிய மேலதிகத் தகவல்களை www.ugc.lk இணையத்தளத்தில் Recognitions of foreign universities இணையத்தளப் பக்கத்திற்குப் பிரவேசிப்பதனூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.




1. **Commonwealth Universities Yearbook**
   (Published by **Association of Commonwealth Universities**)
2. **International Handbook of Universities**
   (Published by **International Association of Universities**)